# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்

---

*[1994, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1994, ஒக்றோபர் மாதம் 28 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 2.10** — *தபாற் செலவு : ரூபா 1.55*

## 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்

[1994, ஒக்றோபர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வை.—ஓ. 49/94

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கும், இலஞ்சச் சட்டத்தின்கீழும், 1975ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழும் ஆன தவறுகளுக்காகக் குற்றவழக்குகளைத் தொடுப்பதனைப் பணிப்பதற்குமாக நிரந்தர ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும்; அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயரும், நடைமுறைக்கு வரும் திகதியும்.**

1. இச்சட்டம், 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் வெளியிடப்படக்கூடியதும் (இதனகத்துப்பின்னர் " நியமிக்கப்பட்ட திகதி " எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.**

2. (1) இச்சட்டத்தின் அடுத்துப்பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவுக்குச் செய்யப்படும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழும் ஆன குற்றவழக்குகளைத் தொடுப்பதனைப் பணிப்பதற்கும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இதனகத்துப்பின்னர் " ஆணைக்குழு " எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவானது மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இவர்களுள் இருவர் உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகளாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் ஒருவர் குற்றப் புலனாய்வும் சட்ட வலுவுறுத்தலும் சம்பந்தமாக பரந்த அனுபவமுள்ளவராகவிருத்தலும் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மேல் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட திகதியன்று தொடங்குகின்றதும் அரசியலமைப்புப் பேரவை தாபிக்கப்படுகின்ற திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சபாநாயகருடனான கலந்தாலோசனையுடன் முதலமைச்சரின் விதப்புரையின்மேல் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

2—டீ 032775—1,150 (94/09)

(3) உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியாக உள்ளவரான ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரைச் சனாதிபதி ஆணைக்குழுத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அதன் சார்பில் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து நீங்கலாம்.

(5) (அ) ஆணைக்குழு உறுப்பினரொருவர், எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது ஆற்றலின்மை அவர்பால் உள்ளது என்ற ஏதுவின்மீது அத்தகைய உறுப்பினரை அகற்றும்படி கூறும் பாராளுமன்றப் பிரேரணையொன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மையினால் (சமூகமளிக்காதோர் உட்பட) ஆதரவளிக்கப்பட்டு சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சனாதிபதியினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலமாகவன்றி பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் எதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரால் கையொப்பமிடப்பட்டிருப்பதோடு, சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது ஆற்றலின்மை பற்றிய முழு விபரங்களையும் கொண்டிருந்தாலன்றி, சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது, அல்லது பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடப்படுதல் ஆகாது.

(ஆ) உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவரை அகற்றுவதற்காகப் பாராளுமன்றப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கை முறை, ஆணைக்குழு உறுப்பினரொருவரை அகற்றுவதற்காகப் பாராளுமன்றப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் எல்லா அம்சங்களிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) ஆணைக்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின்மூலம், பதவி நீக்கத்தின்மூலம் அல்லது அகற்றுகையின்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, ஐந்தாண்டுக்காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது :

ஆயின், எவ்வாறாயினும், இறக்கின்ற, பதவி நீங்குகின்ற, அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினரொருவரின் பதவிக்காலம், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலப் பகுதியாதல் வேண்டும்.

(7) ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதலும், திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும், அவர்களின் பதவிக் காலப்பகுதிகளின் போது குறைக்கப்படாதிருத்தலும் வேண்டும்.

(8) ஆணைக்குழு உறுப்பினர்கள், ஒன்றில், ஒன்றாக அமர்ந்து அல்லது தனியாக அமர்ந்து ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன், ஆணைக்குழு உறுப்பினரொருவர் தனியாக அமர்ந்து அத்தகைய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்குமிடத்து, அவரது செயல்கள் ஆணைக்குழுவின் செயல்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

## பாகம் II

3. ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, 4 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட கடிதத் தொடர்புகளில் அடங்கியுள்ள சார்த்துதல்களைப் புலனாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன், எவரேனுமாளினால் இலஞ்சச் சட்டத்தின் கீழ் அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு புரியப்பட்டதனை அத்தகைய ஏதேனும் புலனாய்வு வெளிக்காட்டுமிடத்து, தோதான நீதிமன்றத்தில் அத்தகைய தவறுக்காக அத்தகைய ஆளுக்கெதிரான வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுவதனைப் பணித்தலும் வேண்டும். ஆணைக்குழுவின் பணி.

4. (1) (ஆளொருவர் எந்தப் பதவியை அல்லது ஊழியத்தை வகிப்பதன்பயனாக இலஞ்சமாக அல்லது ஊழலாக அமைகின்ற செயலைப் புரிந்தாரெனச் சார்த்தப்படுகின்றதோ அந்தப் பதவியை அல்லது ஊழியத்தை ஆணைக்குழுவினால் கடிதத்தொடர்பு பெறப்படுகின்ற திகதியன்று அத்தகைய ஆள் வகித்தாலும்சரி அல்லாவிடினுஞ்சரி) அத்தகைய ஆளுக்கெதிராக ஆணைக்குழுவுக்கான கடிதத்தொடர்பு மூலம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதலொன்று செய்யப்படலாம், அல்லது ஆளொருவர், ஆணைக்குழுவுக்கான கடிதத்தொடர்பின்மூலம் ஆளொருவர் அத்தகைய கடிதத்தொடர்பு ஆணைக்குழுவினாற் பெறப்படுகின்ற திகதியன்று ஏதேனும் பதவியை அல்லது ஊழியத்தை வகித்தாலுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி அத்தகைய ஆளினால் ஏதேனும் செல்வம் அல்லது ஆதனம் அண்மைக்காலத்தில் கொள்ளப்பட்டமைக்கு அல்லது அத்தகைய ஆளினாற் செய்யப்பட்ட எவையேனும் அண்மைக்காலத்திய நிதி அல்லது தொழில் கொடுக்கல்வாங்கல்களுக்கு அல்லது எவையேனும் அண்மைக்காலத்திய செலவினங்களுக்கு ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்க்கலாம்; அத்தகைய கொள்ளுதல்கள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது செலவினங்கள், அத்தகைய கடிதத்தொடர்பைச் செய்யும் ஆளின் அறிவுக்குட்பட அத்தகைய பகிரங்க அலுவலரின் அறியப்பட்ட செல்வ அல்லது வருமான மூலங்களுக்குச் சமமற்றவையாகவிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவுக்கான கடிதத் தொடர்புகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒரு கடிதத்தொடர்பைப் பெற்றதன் மேல், ஆணைக்குழுவானது, அத்தகைய கடிதத்தொடர்பு உண்மையானதென்றும் எந்த விடயப்பொருளின்மீது புலனாய்வு ஒன்று நடாத்தப்படவேண்டுமோ அந்த விடயப்பொருளைக் கடிதத்தொடர்பு வெளிக்காட்டுகின்றதென்றும் அது திருப்திப்படின், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றின்மீதும் அல்லது எவற்றின் மீதும் முடிவுசெய்யும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய புலனாய்வை நடாத்துதல் வேண்டும் :—

(அ) இலஞ்சச் சட்டத்தின் அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குற்றவழக்கு அல்லது வேறு பொருத்தமான வழக்கு ; அல்லது

(ஆ) வேறேதேனும் சட்டத்தின்கீழான குற்றவழக்கு, அத்துடன் ஆணைக்குழுவினாற் பெறப்பட்ட கடிதத்தொடர்பொன்று வேறேதேனும் அதிகாரசபையினால் கையாளப்படவேண்டுமென ஒரு புலனாய்வு நடாத்தப்பட முன்னரேனும் அல்லது பின்னரேனும் அது முடிவுசெய்யுமிடத்து, அத்தகைய கடிதத்தொடர்பை அத்தகைய வேறு அதிகாரசபைக்கு அது அனுப்பிவைக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதனாற் பெறப்பட்ட கடிதத்தொடர்பினால் வெளிக்காட்டப்பட்ட எவையேனும் கருமங்களை, அத்தகைய கருமங்கள் இச்சட்டம் நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னரான காலப்பகுதியொன்றுடன் தொடர்புபட்டவையாகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, அத்துடன் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், புலனாய்வு செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

5. (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பெற்றுக்கொள்வதற்கு, ஏற்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு அவசியமென அல்லது விரும்பத்தக்கதென ஆணைக்குழு எண்ணக்கூடியவாறாக எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்பதற்கும் அத்தகைய எல்லா ஆட்களையும் விசாரணை செய்வதற்கும் ;

(ஆ) ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படும் நோக்கங்களுக்காக ஆளெவரையும் ஆணைக்குழு முன்னர் வருகை தரும்படியும், சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின் மீது வாய்மொழிமூலம், ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் புலனாய்வின்கீழுள்ள கருமங்களுக்கு இயைபாக ஆணைக்குழுவினால் அவரிடம் கேட்கப்படக்கூடிய ஏதே

னும் கேள்விக்கு மறுமொழியிறுக்கும்படியும் தேவைப் படுத்துவதற்கும் அல்லது சத்தியக்கடுதாசி என்ற வடிவத்தில் புலனாய்வின்கீழுள்ள கருமங்களுக்கு இசையபாகவுள்ள எவையேனும் நிகழ்வுகளைக் கூறும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துவதற்கும் ;

(இ) எவரேனுமாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள எதேனும் ஆவணத்தை அல்லது வேறுபொருளைக் காண்பிக்கும்படி அவரைக் கட்டளையிட்டமைப்பதற்கும்;

(ஈ) ஏதேனும் வங்கியின் முகாமையாளரை, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், 4 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆள் தொடர்பில் ஒரு கடிதத் தொடர்பு பெறப்பட்டுள்ளதோ அந்த ஆளின் அல்லது அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையின் அல்லது மகனின் அல்லது மகளின் அல்லது அத்தகைய ஆள் பணிப்பாளராகவுள்ள ஒரு கம்பனியின், அல்லது அத்தகைய ஆள் பயன்தரு அக்கறை கொண்டுள்ள ஒரு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது அத்தகைய ஆள் பங்காளியாகவுள்ள ஒரு குழுமத்தின் கணக்குத் தொடர்பான பதிவீடுகளைக் கொண்டுள்ள வங்கியின் ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது காசோலையைக் காண்பிக்குமாறு அல்லது அத்தகைய புத்தகத்தின், ஆவணத்தின், காசோலையின் அல்லது அதன்கண் உள்ள ஏதேனும் பதிவீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை அவ்வாறு குறித்துரைக்கப்பட்டவாறு கொடுத்துதவுமாறு எழுத்திலான அறிவித்தல்மூலம் பணிப்பதற்கும்;

(உ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியை, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, 4 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆள் தொடர்பில் ஒரு கடிதத்தொடர்பு பெறப்பட்டுள்ளதோ அந்த ஆளின் அல்லது அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையின் அல்லது மகனின் அல்லது மகளின் அலுவல்கள் தொடர்பாக அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லாத் தகவல்களையும் கொடுத்துவுமாறும், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதும் அத்தகைய ஆள், அவரது வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் தொடர்பானதுமான ஏதேனும் ஆவணத்

தை அல்லது ஏதேனும் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியைக் காண்பிக்குமாறும் அல்லது கொடுத்துதவுமாறும் எழுத்திலான அறிவித்தல்மூலம் பணிப்பதற்கும்;

(ஊ) அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்திற்கு, அலுவலகத்திற்கு அல்லது தாபனத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளை அல்லது ஓர் உள்ளூராதிகாரசபையின் மாகாணசபையின், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அரசாங்கம் அதில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகளைச் சொந்தமாகவைத்திருக்கும் கம்பனியின் எப்பதவிப் பெயரையும் கொண்டவரான முதல்வர், தவிசாளர், ஆளுநர் அல்லது பிரதான நிறைவேற்றலுவலர் என்போரை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தனதுடைமையின் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஏதேனும் புத்தகத்தை இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை அல்லது அவற்றின் அல்லது அதன்கண் உள்ள ஏதேனும் பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைக் காண்பிக்குமாறு அல்லது கொடுத்துதவுமாறு எழுத்திலான அறிவித்தல்மூலம் பணிப்பதற்கும் ;

(எ) நான்காம் பிரிவின்கீழ் எந்த ஆள்தொடர்பில் கடிதத் தொடர்பொன்று பெறப்பட்டுள்ளதோ அந்த ஆளை, பின்வருமாறு சத்தியத்தின்மீதான எழுத்திலான கூற்றொன்றைக் கொடுத்துதவுமாறு பணிப்பதற்கும் :—

(i) அத்தகைய ஆளினாலும் அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணையினாலும் மகனினாலும் அல்லது மகளினாலும் ஏதேனும் நேரத்தில் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் எடுத்துக்கூறியும் அவ்வாறு எடுத்துக்கூறப்பட்ட ஆதனங்களுள் ஒவ்வொன்றும் எத்திகதியன்று, கொள்ளப்பட்டதெனக் குறித்துரைத்தும் கொள்வனவுமூலமோ, மரணசாதனக் கையளிப்புமூலமோ, மரபுரிமைமூலமோ அல்லது வேறுவகையாகவோ எனக் குறித்துரைத்தும்;

(ii) ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி புலனாய்வுக்கு இயைபானவையாகவுள்ள அத்தகைய வேறு கருமங்கள் பற்றிய விபரங்களை அடக்கியும் ;

(எ) சத்தியத்தின்மீதான எழுத்திலான கூற்றொன்றைப் பின்வருமாறு கொடுத்துதவுமாறு வேறெவரேனும் ஆளைப்பணிப்பதற்கும் :—

(i) ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் புலனாய்வொன்றை அத்தகைய தகவல் உதவக்கூடுமென ஆணைக்குழு நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஆளினால் அல்லது ஏதேனும் நேரத்தில் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் எடுத்துக்கூறியும் ;

(ii) ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி புலனாய்வுக்கு இயைபானவையாகவுள்ள அத்தகைய வேறு கருமங்கள் பற்றிய விபரங்களை அடக்கியும் ;

(ஐ) நான்காம் பிரிவின் கீழ் எந்த ஆள்தொடர்பில் எழுத்திலான ஒரு கடிதத்தொடர்பு பெறப்பட்டுள்ளதோ அந்த ஆளை, அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையை, மகனை, அல்லது மகளை அல்லது அத்தகைய முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளுக்காக ஏதேனும் ஆதனத்தை நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கும் வேறெவரேனும் ஆளை, அல்லது அவர் பணிப்பாளராகவுள்ள ஒரு கம்பனியை அல்லது அவர் பங்காளியாகவுள்ள ஒரு குழுமத்தை, எழுத்திலான கட்டளை ஆணைக்குழுவினால் கழிக்கப்படும்வரை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் சொத்தாண்மையை அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையைக் கைமாற்றுவதிலிருந்து தடைசெய்வதற்கும் ; அத்துடன் அத்தகைய எழுத்திலான கட்டளையின் பிரதியொன்றை, அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில் காணிப்பதிவாளர், மோட்டார் வாகனமொன்றின் விடயத்தில் மோட்டார்வாகன ஆணையாளர் அத்துடன் ஏதேனும் கம்பனியினது பங்குகளின், பங்குத்தொகுதிகளின் அல்லது தொகுதிக்கடன் பத்திரங்களின் விடயத்தில் கம்பனிகள் பதிவாளர் மற்றும் அத்தகைய கம்பனியின் செயலாளர் என் போருட்பட ஆணைக்குழு தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய அதிகாரிக்குச் சேர்ப்பிக்கச் செய்வதற்கும் ;

(ஒ) பந்தி (1) இன் கீழ் ஆக்கப்பட்ட எழுத்திலான கட்டளையொன்று எந்த அதிகாரிக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ, அந்த ஆள் எவரையும், அத்தகைய அதிகாரியினாற் பேணப்பட்ட ஏதேனும் இடாப்பில் அல்லது பதிவேட்டில் அத்தகைய பிரதியைப் பதிவுசெய்விக்கும்படி அல்லது கோப்பிலிடுவிக்கும்படி தேவைப்படுத்துவதற்கும் ;

(ஓ) எழுத்திலான கட்டளைமூலம், குடிவரவு, குடியகல்வு கட்டுப் பாட்டாளரை, ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வில் எந்த ஆள் தொடர்பில் 4 ஆம் பிரிவின் கீழ் தகவல் தொடர்பொன்று பெறப்பட்டுள்ள தோ அந்த ஆளின் கடவுச்சீட்டையும் ஏனைய பயண ஆவணங்களையும் அத்தகைய எழுத்திலான கட்டளை யில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு மூன்று மாதங் களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்குத் தடுத்து வைக்குமாறு தேவைப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(ஔ) எழுத்திலான கட்டளைமூலம், பெயரினால் அல்லது பதவி யினால் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய வரான பொலிசு அலுவலரை, எந்த ஆள் தொடர்பில் 4ஆம் பிரிவின்கீழ் தகவல் தொடர்பொன்று பெறப் பட்டுள்ளதோ அந்த ஆளெவரும், அத்தகைய கட்டளை யில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இலங்கையிலிருந்து வெளியேறுவதைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடியவா றான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கு மாறு தேவைப்படுத்துவதற்கும்.

2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாமென் பதுடன், அத்தகைய தத்துவத்தைப் பிரயோகிக்கையில் ஆணைக் குழு எந்த ஆளுக்கு ஏதேனும் பணிப்பை வழங்குகின்றதோ அந்த ஆள், ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப் பினும், அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களை யும் பொறுப்புக் களையும் வெளிப் படுத்தல் சட்டத் தின் கீழ் செய்ய பட்ட சொத்துக் களையும் பொறுப்புக்களை யும் பற்றிய வெளிப்படுத் துகைகளைப் பார்வையிட ஆணைக்குழுவுக் குள்ள உரிமை.

6. ஆணைக்குழுவானது, 1975ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த ஆளினால் அந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஏதே னும் வெளிப்படுத்துகையை வருவித்துப்பார்வையிட உரிமைகொண் டதாதல் வேண்டும் ; அத்துடன் ஆணைக்குழுவானது, 4 ஆம் பிரிவின்கீழ் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகை எந்த ஆளுக்குச் செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளை அத்தகைய வெளிப்படுத்துகையை ஆணைக்குழுவின் முன்னர் காண் பிக்குமாறு தேவைப்படுத்துமிடத்து, அத்தகைய தேவைப்பாட் டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளுக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும்.

ஆணைக்குழு தேடுகையிடுதற்கு அதிகாரமளிக்கலாம்.

7. (1) ஆணைக்குழுவானது—

(அ) இலஞ்சச் சட்டத்தின்கீழ் அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழ் தவறொன்று புரியப் பட்டிருப்பதாகச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏது உள்ள தெனவும், தவறு புரியப்பட்டமை பற்றிய சான்று எவை யேனும் வளவுகளில் அல்லது ஏதேனும் கலத்தில், வாகனத்தில் அல்லது வானூர்தியில் அல்லது எவரே னும் ஆளிடம் காணப்படுகின்றதெனவும் திருப்தியடையு மெனில் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதனால் நடாத்தப்படும் ஒரு புலனாய் வின்போது காண்பிக்கப்பட்டிருக்கவேண்டியனவும் அவ் வாறு காண்பிக்கப்பட்டிராதிருப்பனவுமான எவையே னும் புத்தகங்கள், கணக்குகள், வேறு ஆவணங்கள் அல்லது பொருட்கள் அத்தகைய வளவுகளில் அல்லது அத்தகைய ஏதேனும் வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது அத்தகைய ஆளிடம் காணப்படு கின்றனவெனத் திருப்தியடையுமெனில், ஆணைக்குழு, எழுத்திலான கட்டளைமூலம், ஆணைக்குழுவுக்கு உதவு வதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், விடயத் திற்கேற்ப, அத்தகைய வளவுகளுக்குள் அல்லது வாக னம், கலம் அல்லது வானூர்தி அல்லது ஆள் உள்ள ஏதேனும் வளவுகளுக்குள் நுழைவதற்கும், விடயத்திற் கேற்ப, அத்தகைய வளவுகளை, அல்லது அத்தகைய வாகனத்தை, கலத்தை, வானூர்தியை அல்லது ஆளைத் தேடுகையிடுவதற்கும் அதிகாரமளிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் ஒருவர், வளவுகளில் அல்லது வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது ஆளிடம் காணப்படுவ தும், இலஞ்சச் சட்டத்தின் கீழ் அல்லது 1975ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப் படுத்தல் சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறு புரியப்பட்டமைக்கான சான்றென அவர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் கொண்டது மான ஏதேனும் பொருளை அல்லது இச் சட்டத்தின் கீழ் ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் புலனாய்வொன்றின்போது காண்பிக்கப் பட்டிருக்கவேண்டியது என அவர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் கொண்டனவுமான எவையேனும் புத்தகங்களை, கணக்கு களை அல்லது ஆவணங்களைக் கைப்பற்றலாம் ; அத்துடன் இப்பிரி வினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அத்த கைய அலுவலரினால் கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு பொருளும் புத்தகமும், கணக்கும் அல்லது வேறு ஆவணமும் அவரினால் ஆணைக்குழு முன்னர் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், இப்பிரிவின் கீழான தேடுகையொன்றைப் பின்பற்றி பெண் எவரும், ஒரு பெண்ணினால் தவிர தேடுகையிடப்படுதல் ஆகாது.

(3) இப்பிரிவின் பயனுக்கு ஆள் ஒருவர், எவையேனும் வளவுகளுக்குள், கலத்தினுள், வாகனத்தினுள், அல்லது வானூர்தியினுள் நுழைவதற்குத் தத்துவம் எதனையும் கொண்டுள்ளவிடத்து, அவர் அத்தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கு நியாயமாக அவசியமான அத்தகைய ஏதேனும் வலோற்காரத்தைப் பிரயோகிக்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உதவியுடன் அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்துள், அலுவலகத்துள், அல்லது தாபனத்துக்குள் நுழைந்து அதனைத் தேடுகையிடலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், இச்சட்டத்தின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது தமது பணிகளைப் புரிகையில் உதவிகோரி எவரேனும் பகிரங்க அலுவலருக்கு அல்லது வேறெவரேனும் ஆளுக்கு விண்ணப்பிக்கலாம்.

அழைப்புக் கட்டளைகள்.

8. (1) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அழைப்புக் கட்டளையொவ்வொன்றும் ஆணைக்குழுத் தவிசாளரின் கைப்பட்டதாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றும் அதில் பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்கு அதனை, ஒப்படைப்பதன் மூலம், அல்லது அவ்வாறு ஒப்படைப்பது சாத்தியமற்றதானால் அதனை அந்த ஆளின் கடைசியாகத் தெரிந்த வதிவிடத்தில் விட்டுவைப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) அழைப்புக் கட்டளையொன்று சேர்ப்பிக்கப்பட்டவரான ஆள் ஒவ்வொருவரும், அதில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவின் முன் வருகைதரல் வேண்டும்; அத்துடன் ஆணைக்குழுவினால் எவையேனும் கேள்விகளுக்கு மறுமொழி யிறுத்தல் வேண்டும் அல்லது அழைப்புக்கட்டளையினால் அவரிடம் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய ஆவணங்களை அல்லது வேறு பொருட்களைச் சாண்பித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றும் ஒரு கிராம சேவை அலுவலரினால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட ஓர் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் சேர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழு முன்னர் வருகைதரும் ஆட்களுக்குள்ள சிறப்புரிமைகளும் பாதிப்பின்மைகளும்.

9. (1) ஆளெவரும், ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவின் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்று, கொடுக்கப்பட்ட தகவல் அல்லது மறுமொழி தொடர்பில் அல்லது காண்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணம் வேறு பொருள் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குக்கு, குற்ற வழக்குக்கு அல்லது வேறு வழக்குநடவடிக்கைக்கு ஆளாதலாகாது.

(2) ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவின் முன்னர் எவரேனுமாளினால் அளிக்கப்பட்ட கூற்று, அல்லது கொடுக்கப்பட்ட மறுமொழி அல்லது தகவல் பற்றிய சான்றெதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கெதிலும், குற்றவழக்கெதிலும் அல்லது வேறு வழக்குநடவடிக்கையெதிலும் அத்தகைய ஆளுக்கெதிராக ஏல்தகவுடையதாதலாகாது:

ஆயின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளதெதுவும்

(i) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறுக்காக அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக ஏதேனும் வழக்குக்கு, குற்றவழக்குக்கு அல்லது தண்டத்துக்கு எவரேனும் ஆளுக்குள்ள பொறுப்பைச் சுருக்குதலோ அல்லது பாதித்தலோ அல்லது சுருக்குவதாக அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது;

(ii) அத்தகைய ஏதேனும் வழக்கின் அல்லது குற்றவழக்கின் நோக்கங்களுக்காக எவரேனுமாளின் பெயரை அல்லது கூற்றை அல்லது கூற்றின் ஏதேனும் பாகத்தை வெளியிடுவதை அல்லது வெளியிடுவதைத் தடைசெய்தலாகாது அல்லது தடைசெய்வதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது; அல்லது

(iii) பதினைந்தாம் பிரிவின்கீழ் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் கூற்றின் ஏல்தகவுடைமையைப் பாதித்தல் ஆகாது.

செலவுத் தொகைகளும் ஏனைய செலவுகளும்

10. (1) இந்தச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் புலனாய்வு முற்றுப்பெற்றதன்மேல் புலனாய்வின் கீழுள்ள கருமத்தில் ஏதேனும் வகையில் மாட்டுப்பட்டிருக்கும் அல்லது சம்பந்தப்பட்டிருக்கும் எவரேனும் ஆளுக்கு, அல்லது அத்தகைய புலனாய்வு சம்பந்தமாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுகிய முகாமையாளரைக் கொண்டுள்ள ஏதேனும் வங்கிக்கு, புலனாய்வு சம்பந்தமாக அத்தகைய ஆளினால் அல்லது வங்கியினால் நியாயமாக உறப்பட்டிருக்கக்கூடிய செலவுத்தொகைகளையும் செலவுகளையும் மேவுவதற்குப் போதுமானதென, ஆணைக்குழு கருதக்கூடிய அத்தகைய பணத்தொகை ஆணைக்குழுவினால் வழங்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் எல்லாப் பணங்களும் அந்நேரக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து அரசினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

*குறித்த சில விடயங்களில் ஆணைக்குழு குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடக்குமபடி பணித்தல்.*

11. இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் புலனாய்வொன்றின்போது அதனாற்பெறப்படும் விடயப்பொருள், இலஞ்சச் சட்டத்தின்கீழ் அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழ் எவரேனுமாளினால் தவறொன்று புரியப்பட்டதை வெளிக்காட்டுமிடத்து, ஆணைக்குழுவானது, தோதான நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்குமபடி பணிப்பாளர் தலைமையதிபதியை பணித்தல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி அதற்கிணங்க வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் புலனாய்வொன்றின்போது ஆணைக்குழுவினால் பெறப்பட்ட விடயப்பொருள், இலஞ்சச் சட்டத்தின் 11 ஆம் பாகத்தின் கீழானதும், அவாநிறைவு அல்லது அதன் பெறுமதி இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஓர் அவா நிறைவை எவரேனுமாள் பரிந்து கேட்டல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது கொடைமுனைதல் என்பனவற்றைக் கொண்டுள்ள ஒரு தவறை வெளிக்காட்டுமிடத்து, ஆணைக்குழுவானது, நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக் கெதிராக வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்குமபடி பணித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விடயப்பொருள் அப்பாகத்தின் கீழானதும், அவா நிறைவு அல்லது அதன் பெறுமதி இரண்டாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதுமான ஏதேனும் அவாநிறைவை எவரேனுமாள் பரிந்துகேட்டல், ஏற்றுகொள்ளுதல் அல்லது கொடைமுனைதல் என்பவற்றைக் கொண்டுள்ள தவறொன்றை வெளிக்காட்டுமிடத்து, ஆணைக்குழுவானது, குற்றப்பகர்வின்மூலம் மேல்நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக் கெதிராக வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்குமபடி பணித்தலும் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட குற்றப்பகர்வு மேல நீதிமன்றத்தில் பெறப்படத்தாகும்.*

12. (1) பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப்பகர்வொன்றின் மூலம் 11 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட பணிப்பொன்றைப் பின்பற்றி மேல் நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து, அத்தகைய மேல் நீதிமன்றம் அத்தகைய குற்றப்பகர்வைப் பெறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய குற்றப்பகர்வு அத்தகைய நீதிமன்றத்துக்குச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் முன்வைக்கப்பட்ட குற்றப்பகர்வு என்றுற்போன்று எல்லா அம்சங்களிலும் அத்தகைய குற்றப்பகர்வில் விவரிக்கப்பட்ட தவறை விளங்குவதற்கு நியாயாதிக்கம் கொண்டதாதலும் வேண்டும்.

(2) குற்றப்பகர்வுடன் இணைக்கப்பட வேண்டுமென 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட

ஆவணங்களுடன் சேர்த்து, குற்றஞ் சாட்டப்பட்டவரினாலும் வழக்குத் தொடுநர் தரப்பினால் சாட்சிக்காரராக அழைக்கப்பட முன்மொழியப்படுகின்ற ஒவ்வோர் ஆளினாலும் ஆணைக்குழுவின் முன்னர் அளிக்கப்பட்ட கூற்றுக்கள் பற்றிய பிரதியொன்று ஏதேனுமிருப்பின், அது, அத்தகைய ஒவ்வொரு குற்றப்பகர்வுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(3) பதினோராம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட பணிப்பொன்றைப் பின்பற்றி ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக ஆணைக் குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் ஏதேனும் நீதிமன்றத்தில் எவரேனுமாளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து 9 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் அல்லது அச்சட்டத்தின் 9 அ என்னும் பிரிவின் (இ), (ஈ), (உ), (ஊ) என்னும் பந்திகளில் உள்ளதெதுவும், அத்தகைய எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு அல்லது தொடர்ந்து நடாத்துவதற்கு ஏற்புடையதாதலாகாது.

13.(1) ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழு அலுவலரொருவர் அல்லது ஆணைக்குழுவினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் சட்டத்தரணி, வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப்பகர்வொன்றின்மீது ஒரு மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் தவறொன்றுக்கான விளக்கத்தில் வழக்குத்தொடுக்குநர் தரப்பு வழக்கை நடாத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஆணைக்குழு அலுவலர்கள் மேல் நீதிமன்றத்தில் குற்றவழக்குகளை நடாத்துவதற்கு உரித்துடையோராவர்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப்பகர்வொன்றினால் மேல்நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள், தொடுக்கப்படுமிடத்து, அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதி சட்டத்துறைத் தலைமையதிபதியினால் மேல் நீதிமன்றத்திற்கு அத்தகைய தவறுக்காகக் குற்றப்பகர்வொன்று முன்வைக்கப்பட்டிருந்திருப்பின் அத்தகைய தீர்ப்புக்கு, கட்டளைக்கு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உரிமையிருந்திருக்கும் எல்லா விடயங்களிலும் அத்தகைய நீதிமன்றத்தின் தீர்ப்பு, கட்டளை அல்லது தண்டனைத் தீர்ப்பு என்பவற்றிற்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். அத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் அத்தகைய மேன்முறையீட்டை ஆதாரப்படுத்தி ஏதேனும் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

14.(1) இலஞ்சச் சட்டத்தின் கீழான அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான விளக்கத்தின் போது எவரேனும் சாட்சிக்காரர் முக்கியமான ஏதேனும் விடயத்

முரண்பாடான கூற்றுக்கள்.

தின் மீது, இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வின் போது அவரினால் முன்னர் அளிக்கப்பட்ட கூற்றை, ஒன்றில் வெளிப்படையாகவோ அல்லது அவசியமான உட்கிடைமூலமோ முரண்படுத்தினால், தலைமை வகிக்கும் நீதிபதி அல்லது நீதிவான், எல்லாச் சூழ்நிலைகளிலும் காப்பானதும் நீதியானதும் என அவர் கருதினால் தனிப்பட்ட ஒரு மூலத்திலிருந்தான சான்றினால் அத்தகைய கூற்று முக்கிய விபரங்களில் ஒப்புறுதிப்படுத்தப்படின் அத்தகைய கூற்றின் மீது செயலாற்றுதலும், அத்தகைய விளக்கம் முற்றுப்பெற்றதன்மேல் அத்தகைய சாட்சிக்காரரை ஒரு குற்றச்சாட்டின் மீது அத்தகைய நீதி மன்றத்தின் முன்னர் விளங்கப்படச் செய்தலும், அல்லது அத்தகைய நீதி மன்றம் மேல்நீதிமன்றமாகவிருப்பின், நீதிமுறை நடவடிக்கையின் ஒரு கட்டத்தில் வேண்டுமென்று பொய்ச்சான்றளித்தார் என்ற குற்றப்பகர்வின்மீது முன்னிலைப்படுத்தப்படச் செய்தலும் விளங்கப்படச் செய்தலும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் விளக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றப்பகர்வில் அல்லது குற்றச்சாட்டில் சார்த்தப்பட்ட முரண்பாடான கூற்றுக்களை அளித்தார் என்பதை எண்பிப்பது போதுமானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூற்றுக்களுள் எது பொய்யானதெனை எண்பிப்பது அவசியமாதலுமாகாது.

(3) தலைமை வகிக்கும் நீதிபதி அல்லது நீதிவான், உசிதமானதென அவர் கருதின், தகுதியென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்கு (1)ஆம் உட்பிரிவின் கீழ் எவரேனும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் விளக்கத்தை ஒத்திவைக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் விடயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய விளக்கம் முற்றுப்பெறும்வரை விளக்கமறியலில் இடப்படுதலும் வேண்டும் :

ஆயின், மேன்முறையீட்டு நீதிமன்றம் விதிவிலக்கான சூழ்நிலைகளில் விளக்கம் முற்றுப் பெறும்வரை அத்தகைய ஆளைப் பிணையில் விடலாம்.

இலஞ்சச் சட்டத்தின் கீழான அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழான தவறுகளுக்கான விளக்கங்களில் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட கூற்றுக்களின் ஏற்தகவு.

15. ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் புலனாய்வின் போது ஆணைக்குழுவுக்கு காண்பிக்கப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட—

(அ) சத்தியக்கடுதாசி அல்லது சத்தியத்தின் மீதான கூற்று ஒன்று :

(ஆ) ஏதேனும் புத்தகம், ஆவணம், காசோலை, பதிவேடு அல்லது இடாப்பு அல்லது அவற்றின் அல்லது அத்தகைய ஏதேனும் புத்தகத்தில், ஆவணத்தில், பதிவேட்டில் அல்லது இடாப்பில் உள்ள ஏதேனும் பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று, இலஞ்சச் சட்டத்தின் கீழான அல்லது 1975 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும்

வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக எவரேனும் ஆளின் விளக்கத்தில் இயைபானவையாகவும் ஏல்தகவுடையனவாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் நிறைவேற்றுகை பற்றிய நிகழ்வினதும் அதன் உள்ளீடுகளினதும் முதற்றோற்ற அளவிலான எண்பிப்பாதலும் வேண்டும்.

## பாகம் III

இலஞ்சம், ஊழல் என்பவற்றைத் தடுப்பதற்கான பணிப்பாளரும் தலைமையதிபதியும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியும்.

16. (1) சனாதிபதியானவர், ஆணைக்குழு உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக்குறிப்பீடு செய்யப்படுபவரான) இலஞ்சம், ஊழல் என்பவற்றைத் தடுப்பதற்கான பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை, இச்சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு ஒறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதலும் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும், ஆணைக்குழுவுடனான அவர்களின் சேவைக்காலப்பகுதியின்போது குறைக்கப்படாதிருத்தலும் வேண்டும்.

(3) ஆணைகுழுவானது, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலருக்கு (5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ) என்னும் பந்திகளிலும், 11 ஆம் பிரிவிலும், இப்பிரிவிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தத்தவம் நீங்கலாக) அதன் தத்துவங்களுள் எவற்றையும் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய தத்துவங்கள் கையளிக்கப்படுகின்ற ஆள், ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைய அத்தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(4) இச்சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதில் ஆணைகுழுவுக்கு உதவுவதற்கு அவசியமாகக் கூடியவர்களான அததகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும நியமிக்கப்படுதல் வேண்டும்.

இரகசியம் பேணுதற்கான கடமை.

17. ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியும் அத்துடன் ஒவ்வோர் அலுவலரும் அல்லது சேவையாளரும், தமது பதவிக்குரிய கடமைகளை எற்குமுன்னர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கங்களுக்காகவன்றி, இச்சட்டத்தின் கீழ் தமத தத்தவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட, அல்லது தமது அறிவுக்கு வரக்கூடிய எதேனும் தகவலைத் தாம் வெளிவிட மாட்டாரென வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்.

ஆணைக்குழு உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் முதலியன.

18. (1) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி அத்துடன் அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்பட்ட பகிரங்க அலுவலர்

களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு புலனுய்வும் அச்சட்டக்கோவையின் கருத்தெல்லைக்கு உட்பட நீதிமுறை நடவடிக்கையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியும் ஒவ்வோர் அலுவலரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல்வேண்டும்.

வழக்குக்கான பாதுகாப்பு.

19. (1) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியால் அல்லது எவரேனும் அலுவலரினுல் அல்லது சேவையாளரினுல் அல்லது எவ்வகையிலும் ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற எவரேனும் வேறு ஆளினுல் அத்தகையாளரென்ற முறையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாது விட்டுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவமதிப்புத் தவறென்றுக்காகத் தவிர அத்தகைய உறுப்பினருக்கெதிராக அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கெதிராக அல்லது அலுவலருக்கெதிராக அல்லது சேவையாளருக்கெதிராக அல்லது வேறு ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படலாகாது.

(2) ஆணைக்குழு உறுப்பினர் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அலுவலரொருவர் அல்லது சேவையாளரொருவர், அவமதிப்புத் தவறென்றுக்கான அல்லது இச்சட்டத்தின் கீழான தவறென்றுக்கான தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான தவறென்றுக்கான அல்லது இலஞ்சச் சட்டத்தின் கீழான அல்லது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறு தவிர, இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினுல் நடாத்தப்படும் ஏதேனும் புலனுய்வின்போது ஆணைக்குழுவினுல் பெறப்பட்ட ஆவணமெதனையும் ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்கவோ அல்லது ஆணைக்குழுவின் அறிவுக்கு வரக்கூடிய ஏதேனும் கருமத்தை அல்லது பொருளை ஏதேனும் நீதிமன்றத்திற்கு வெளிவிடவோ தேவைப்படுத்தப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினுல் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஆணைக்குழு உறுப்பினர் எவருக்கு மெதிராக அல்லது அத்தகைய அறிக்கையில் பொருளளவில் உண்மையான விபரம் வேறெவரேனுமாளினுல் வெளியிடப்பட்டமை தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படலாகாது.

## பாகம் IV

அவமதிப்புக்கான தண்டனை.

20. (1) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும், உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு என்றுற்போன்று உயர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு இத்தால் உரித்தாக்கவும் படுகின்றது.

(2) ஆணைக்குழுவின் முன்னிலையிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி ஆணைக்குழு தொடர்பாகப் புரியப்பட்ட ஒரு செயல் அல்லது செய்யாமை, அத்தகைய செயல் உயர் நீதிமன்றம் தொடர்பாகப் புரியப்பட்டால் அல்லது புரியாது விட்டுவிடப்பட்டால், அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிரான அல்லது அவமரியாதையான அவமதிப்புத் தவறாக அமைந்திருக்குமெனில், ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையான அவமதிப்புத் தவறாக அமைதல் வேண்டும்.

(3) எவரேனுமாள்—

(அ) இச்சட்டத்தின் கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக் கட்டளையொன்றில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும், இடத்திலும் ஆணைக்குழுவிற்கு முன்னர் தோன்றுவதற்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றித் தவறினால்; அல்லது

(ஆ) சத்தியஞ் செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுத்தால் அல்லது, உரிய முறையில் சத்தியஞ் செய்து அல்லது உறுதியுரை மொழிந்து, ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமங்கள் குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி எதற்கும் மறுமொழியிறுப்பதற்கு மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(இ) ஆணைக்குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஓர் அறிவித்தலின் அல்லது எழுத்திலான கட்டளையின் தேவைப்பாடுகளுக்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி இணங்கியொழுகுவதற்கு மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் கருமங்களின் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை ஆணைக்குழுவுக்குக் காண்பிப்பதற்கும் காட்டுவதற்கும் மறுத்தால் அல்லது தவறினால்;

அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்படும் கருமமானது, ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளிலான விசாரணையொன்றின் விடயப்பொருளாகவுள்ள அதே கருமம் அல்லது பொருளளவில் அதே கருமம், அல்லது அவ்விசாரணையின் விடயப்பொருளாகவிருக்கும் சாத்தியம் கொண்ட எந்த ஏதுவின்மீது, அல்லது ஏதேனும் கேள்விக்கான மறுமொழி அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பித்தல் அல்லது காட்டுதல், வேறெவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஓர் ஆளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கலாம், அல்லது அவருக்குப் பங்கம் விளைவிக்கலாம் என்ற ஏதுவின்மீது அத்தகைய கேள்விக்கு மறுமொழியிறுப்பதற்கு அல்லது அத்தகைய ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு அத்துடன் காட்டுவதற்கு அத்தகைய ஆள் மறுத்தல் அல்லது தவறுதல் ஒரு நியாயமான காரணமாகக் கருதப்படுதலாகாது.

(4) ஓர் ஆணைக்குழு, (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையாக அவமதிப்புத் தவறொன்றை ஓர் ஆள் புரிந்துள்ளாரெனத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய தீர்மானத்தை எடுத்துக்காட்டும் சான்றிதழொன்றை உயர் நீதிமன்றத்துக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியைக் கொண்டு ஆணைக்குழு அனுப்புவித்தல் வேண்டும்; அத்தகைய சான்றிதழ் ஒவ்வொன்றும், ஆணைக்குழுவின் தவிசாளரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உயர்நீதிமன்றம் அதன் கவனத்துக்குட்படுத்தத்தக்கதென எண்ணும் அவமதிப்புத் தவறுக்கான தண்டனைக்கான வழக்கு

நடவடிக்கை எதிலும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்ப மிடப்பட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பட்ட சான்றிதழ் ஒன்றெனக் கொள்ளப்படுகின்ற ஆவணம் எதுவும்—

(அ) சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மாறாணது எண்பிக்கப்பட்டாலன்றி, மேலும் எண்பிப்பில்லாது அத்தகைய சான்றிதழாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அந்தச் சான்றிதழில் எடுத்துக்காட்டப்பட்ட தீர்மானம் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டது என்பதற்கும், அந்தத்தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கும் சான்றுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் அவமதிப்புத்தவறைத் தண்டிப்பதற்கென இந்தப் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் எவற்றிலும், ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும், அவரது சம்மதத்துடன் தவிரவும், அத்துடன் இச்சட்டத்தில் மாறாக எது எவ்வாறிருப்பினும், ஒரு சாட்சிக்காரராகக் கட்டளைவிட்டழைக்கப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

**21.** பொய்யானதென அறிந்துகொண்டு அல்லது உண்மையற்றதென நம்புவதற்குக் காரணமுடையவராக இருந்துகொண்டு 4 ஆம் பிரிவின்கீழ் தம்மால் ஆணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட கடிதத்தொடர்பு எதிலும் சார்த்துதல் ஒன்றைச் செய்கின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் என்பதுடன், மேலதிகமாக, எந்த ஆள் தொடர்பில் தகவல் தொடர்பொன்று வழங்கப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையிலான நட்டஈட்டின் கொடுப்பனவுக்கு ஆளாதலும் வேண்டும். பொய்ச் சார்த்துதல் தவறொன்றாகும்.

**22.** இரகசியத்தைப் பேணுவதற்கு 17 ஆம் பிரிவினால் தம்மீது சுமத்தப்பட்ட கடமையை மீறிச் செயலாற்றுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாததான ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். இரகசியம் தொடர்பான ஏற்பாட்டை மீறுதல் தவறொன்றாகும்.

பல்வினைத் தவறுகள்.

23. (அ) ஆணைக் குழுவுக்குஎவரேனும் ஆளினால் கொடுத்துதவப்பட்ட சத்தியக் கடதாசியில் பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற ;

(ஆ) ஏழாம் பிரிவின் கீழ் உதவியளிக்குமாறு, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவியளிப்பதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் கேட்டுக் கொள்ளப்படும்போது அத்தகைய உதவியை அளிக்க வேண்டுமென்று, அசட்டை செய்கின்ற அல்லது தவிர்க்கின்ற ;

(இ) ஏழாம் பிரிவின் கீழ் நுழைவதற்கு அல்லது தேடுகையிடுவதற்கு உள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதியை, ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அல்லது 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற ;

(ஈ) ஆணைக்குழுவினால் பரிசீலனை செய்யப்படவுள்ள அல்லது பரிசீலனை செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளுடன் தலையிடுகின்ற ;

(உ) ஏதேனும் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதிலிருந்து தவிர்க்குமாறு எவரேனும் அத்தகைய ஆளைத் தூண்டுகின்ற;

(ஊ) ஏதேனும் நீதிமன்றத்தின் சாட்சியம் கொடுப்பதிலிருந்து எவரேனும் அத்தகைய ஆளைத் தடுப்பதற்காக அவரின் உடலுக்கு, உளத்திற்கு, அல்லது கீர்த்திக்கு ஊறு விளைவிக்கப்போவதாக அவரை அச்சுறுத்துகின்ற ;

(எ) ஏதேனும் நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுப்பதிலிருந்து எவரேனும் அத்தகைய ஆளைத் தடுப்பதற்காக அவரின் உடலை, உளத்தை அல்லது கீர்த்தியை ஊறுபடுத்துகின்ற ;

(ஏ) ஏதேனும் நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுக்க வேண்டாம் என எவரேனும் அத்தகைய ஆளைக் கட்டாயப்படுத்துகின்ற,

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல்வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆணைக் குழுக்கள் தொடர்பாக எழுத்தாணை நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படல்.

24. (1) ஆணைக்குழுவுக்கெதிராக நிவாரணம் நாடப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பில் அரசியலமைப்பின் 140ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கம், உயர் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படல் வேண்டும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழ் புலனாய்வொன்றை நடாத்துதலைத் தொடங்குவதிலிருந்து அல்லது தொடர்ந்து நடாத்துவதிலிருந்து அல்லது இச்சட்டத்தில் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிப்பதிலிருந்து அல்லது இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் பணிப்பை விடுப்பதிலிருந்து ஆணைக்குழுவைத் தடை செய்கின்ற அல்லது நிறுத்துகின்ற, அல்லது தடைசெய்கின்றதான அல்லது நிறுத்துகின்றதான பயனைக் கொண்டுள்ள தடைக் கட்டளை அல்லது தடைசெய் கட்டளை எதுவும், ஏதேனும், நீதிமன்றத்தினால் வழங்கப்படுதலாகாது.

25. இலஞ்ச ஆணையாளரினால் தொடங்கப்பட்டு நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறுதிருக்கின்ற இலஞ்சச் சட்டத்தின் கீழான எல்லாப் புலனாய்வுகளும் நியமிக்கப்பட்ட திகதியன்று ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டனவாக இருத்தல்வேண்டுமென்பதுடன், அத்தகைய புலனாய்வுகள் ஆணைக்குழுவினால் தொடங்கப்பட்டிருந்தன என்றுற்போன்று ஆணைக்குழுவினால் தொடர்ந்து நடாத்தப்படலாம்; அத்துடன் இலஞ்ச ஆணையாளரினால் தொடுக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட திகதியன்று ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறுதிருப்பவையுமான எல்லா வழக்கு நடவடிக்கைகளும், அவை ஆணைக்குழுவின் பணிப்பின் மேல் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் என்றுற்போன்று நியமிக்கப்பட்ட திகதிக்குப்பின்னர் தொடர்ந்து நடாத்தப்படலாம் என்பதுடன், இலஞ்சச் சட்டத்தின் கீழான புலனாய்வுகளின்போது இலஞ்ச ஆணையாளருக்கு கொடுத்துதவப்பட்ட எல்லாக் கூற்றுக்களும் ஆவணங்களும் அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு இன்னமும் வலுவில் இருக்கின்றது என்றுற்போன்று, வழக்கு நடவடிக்கைகளில் ஏற்றகவுடையனவாதலும் வேண்டும். நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

26. ஆணைக்குழுவானது, அவசியமென அது கருதக்கூடியவாறான அடிக்கடியாக அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல் வேண்டும். எவ்வாறுயினும், ஒவ்வொரு பஞ்சாங்கஆண்டிலும் ஆகக்குறைந்தது ஓர் அறிக்கையையாவது அது தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றையும் ஆணைக்குழு சனாதிபதிக்கு அனுப்பிவைக்கச் செய்தல் வேண்டும்; சனாதிபதி அதனைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடச்செய்தல் வேண்டும். ஆணைக்குழுவின் அறிக்கைகள்.

27. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

## பாகம் V

பொருள் கோடல்.

28. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய—

" இலஞ்சம் " என்பது, இலஞ்சச் சட்டத்தின் 11 ஆம் பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக ஏதேனும் அவா நிறைவைக் கொடை முனைதல், பரிந்துகேட்டல் அல்லது ஏற்றுக்கொள்ளல் என்று அல்லது அத்தகைய ஏதே னும் ஏற்பாட்டுக்கு முரணான வேறு ஏதேனும் செயல் என்று பொருளாகும் ;

"ஊழல்" என்பது, இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அவாநிறைவு" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) பணம் அல்லது ஏதேனும் கொடை, கடன், கட்டணம், கைம்மாறு, தரகு, பெறுமதியான பிணைப்பொறுப்பு அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் விவரணத்தினதான வேறு ஆதனம் அல்லது ஆதனத்திலான அக்கறை;

(ஆ) ஏதேனும் பதவி, ஊழியம் அல்லது ஒப்பந்தம்;

(இ) முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ எத்த கையதுமான ஏதேனும் கடனின், கடப்பாட்டின் அல்லது வேறு பொறுப்பின் ஏதேனும் கொடுப் பனவு, விடுவிப்பு, பொறுப்பு விடுவிப்பு அல்லது ஒழித்துக் கட்டுகை;

(ஈ) உறப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஏதேனும் தண்டத்திலிருந்தான அல்லது இயலாமையிலி ருந்தான அல்லது ஏலவே தொடுக்கப்பட்டதா யினுஞ்சரி, அல்லதாயினுஞ்சரி, ஒழுக்காற்று அல்லது தண்டனைத் தன்மையினதான ஏதேனும் வழக்கிலிருந்தான அல்லது வழக்கு நடவடிக்கை களிலிருந்தான பாதுகாப்பு உட்படவும், அத்துடன் ஏதேனும் உரிமையை அல்லது கடமையைப் பிரயோகித்தல் அல்லது பிரயோகிக்காது தவிர்த்தல் உட்படவும் எத்தகையதுமான ஏதேனும் விவரணத்தினதான வேறு ஏதேனும் சேவை, அனுகூலம் அல்லது ஏதேனும் அலுவலகமுறையான தத்துவம் அல்லது நன்மை, அத்துடன்

(உ) முற்போந்த (அ), (ஆ), (இ), (ஈ) என்ற பந்தி களின் கருத்துக்குட்பட ஏதேனும் அவாநிறை வின் ஏதேனும் கொடை முனைவு, பொறுப்பேற்பு அல்லது வாக்குறுதி ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுக்கு நேரொத்ததாகவுள்ள அல்லது ஒத்ததாகவுள்ள தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாண சபை என்று பொருளாகும் ;

"அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்" என்பது, இலஞ்சச் சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.